


# தேவதாயின் குரல்

"இறுதியில் எனது மாசற்ற இருதயம் வெற்றி கொள்ளும்"

FOR PRIVATE CIRCULATION ONLY

குரல்: 10 யாழ்ப்பாணம் செப்ரெம்பர் 1997


## துன்பத்தை இன்பமாக்கும் சற்குரு

ஆசிரியருரை:-

"காலம் வருகிறது. ஏன் வந்தே விட்டது அப்போது உண்மையாய் வழிபடுவோர் தந்தையை அவரது உண்மை இயல்புக் கேற்ப உள்ளத்தில் வழிபடுவர்" (யோவான் 4:23)

இவ் வழிபடுதலுக்கு குரு அவசியம். உலகில் பயணம் செய்வது இலகு. இறைவனில் யாத்திரை செய்வது கடினம்.

அழகு, அந்தஸ்து, பணம், ஆளுமை இவை ஒன்றாக காணும் போது, வியாபாரச் சிலையாக, தம் விளம்பர யுக்திகளைப் பாவித்து மனிதரை கட்டி எழுப்புவதையும், அதே யுக்திகளின் பிரதிநிதிகளே (உருவாக்கிகளே) அம் மனிதரின் பிரத்தியேக வாழ்வை ஊடுருவி, உள அமைதியை அழித்து அவர் வாழ்வை நிர்மூலமாக்கி விடுவதும் உலக நியதி,

டயனா இளவரசியின் துன்பவியல் நாடகம் இதற்கு ஓர் எடுத்துக் காட்டு

. மாறாக இறை இரகசியத்தின் ஆனந்த பெருவெளிகளில் யாத்திரை செய்வது ஆன்மாவுக்கும் அதன் மணவாளன் இறை இயேசுவுக்கும் மாத்திரமே தெரியும் இரகசியம். அவர் காட்டும் அந்த ராஜகராஜ வழி சிலுவையோகம்,

"கடவுளை யாருமே கண்டதில்லை, தந்தையின் நெஞ்சத்துக்கு நெருக்கமான வரும், கடவுள் தன்மை கொண்டவருமான ஒரே மகனே அவரை வெளிப் படுத்தியுள்ளார்." (யோவான் 1:18)

இச்சற்குருபற்றி சுவாமி ஞானப்பிரகாசர் தமது 5 வது வேதசாஸ்திர துண்டுப் பிரசுரத்தில் 'அகஸ்தியர் ஞானம்' என்ற சித்தர் பாடலைக் காட்டி,

"வணங்குவாய் செகசோதி ஒருவனாகி
மாதிலத்தை ஒருநொடியில் வகுத்தே
மண்ணில்
குணமான மனிதரையும் படைத்தபின்பு
குவலயத்தில் தானுதித்து குருவாய்வந்து
சன்மான சமுசாரம் ஒன்றில்லாமற்
சந்நாசி போலிருந்து தவத்தைக்காட்டி
அன்பான சித்தர்களை இருத்திப்போட்டு
அகன்றதலஞ் சென்றவரை அண்டு
வாயே"

என்று விளக்கியுள்ளார்.

"சற்குரு யேசுவைக் காட்டுகிறவர்களைப்பற்றி" இவர்களுக்கு கருணையே வழி, உண்மையே ஆதாரணம் தயையே சொரூபம் ........ இவர்கள் ஆஸ்தியை, ஐசுவரியத்தை துறந்து வால சந்நியாசம் பூண்டு, தேவ சற்குருவாகிய யேசுநாயகமூர்த்தியைப் பிரசங்கித்துக் கொண்டு வருபவர்களாம்."

நீங்களும் இம் மூன்றாம் மிலேனியத் திரியுகத்தில் ...... பரப்பிரம்மமான சகதீஸ்வரன் சற்குருவாய் எழுந்தருளி வந்து பிரசங்கித்த மோட்ச நெறியை இந்தக் காரணக் குருக்கள் முன்னிலையில் கேட்டு அறிந்து கொள்ளத் தேடுங்கள்.

வரும் திரியுகத்தில் பலர் இக் குருக்களைத் தேடி அலைவர். யேசுவைக் காட்டும் குருக்களை - வெறும் கோயில் வழிபாடுகளையும், வீட்டுக் கிருத்தியங்களையும் செய்யும் புரோகிதர்கள் அல்ல. இவர்கள் பெரிய வியாழன் அன்று தங்கள் கால்களைக் கழுவ விட்டவர்கள். அவரின் கிண்ணத்தில் கையைத் தோய்த்தவர்கள்

இன்று யேசுவைக் காட்டக் குருக்களுக்கு நேரமில்லை என்றால் சிலுவையின் பாரத்தால் நொறுங்குண்ட எம் மக்களுக்கு வழிகாட்டி முன் செல்ல, "நானோ என் ஆண்டவராம் யேசுவின் சிலுவையில் அன்றி வேறெதிலும் பெருமை பாராட்டமாட்டேன்." (கலா 6:14) என அறைகூவி வாழ்பவர்களையே தேடுவர், அப்படிச் சிலர் தோன்றும் போது "நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எவ்வளவு அழகானவை ... " (ஏசாயா 52:7) என்று நினைத்து அவர்கள் பின்னே ஓட மக்கள் எத்தனிப்பர்.

அல்ஜீரியாவில் ஆயர் கிலேவர் உட்பட குருக்கள், பொதுமக்கள் பலர் அடிப்படைவாத முஸ்லிம்களால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இருந்தும் அந் நாட்டில் 400 முஸ்லிம்கள், சிலுவை இரட்சகரை ஏற்று கிறிஸ்தவர்களாகினர்

வன்னியில் குண்டுமாரி, பெருமழை, நோய்கள், பசி, பட்டினி இவற்றுள் சிலுவை இரட்சிப்பை அறிவிக்கும் குருக்களோடு சிலுவை எழுச்சி மாதத்தில் (செப்டம்பர் 14) எம் செப, தப சிலுவைகளோடு துணை நிற்போம்.

## துறவுக்கோர் எடுத்துக்காட்டு

அன்னை திரேசா, கத்தோலிக்க திருச்சபையின் உண்மைப் புதல்வி. மனித நேயத்துக்கு முக்கிய இடமளித்தவர் அவர்.

2ம் வத்திக்கான் சங்கத்தின் மாற்றங்கள், துறவற நிலையின் பாரம்பரிய வாழ்க்கை முறைகளில் சில மாறுதல்களை ஏற்படுத்தின.

சில துறவிகள் செபமாலையைக் கைவிட்டபோது, தேவதாயின் உண்மைப் புதல்வியாக அவர் அதை அணிந்து செபித்தார்- அன்னை மரியின் அடக்கமான எளிமையான நீலக்கரை பிடித்த வெள்ளைச் சேலையணிந்து முக்காட்டினால் தம்மை மறைத்துக்கொண்ட ஆயிரக் கணக்கான கருணை வடிவங்களை அவர் உருவாக்கினார்.

உலகம் உதவாது என்று ஒதுக்கிவிட்ட, வீதியில் வீசிவிட்ட; மானிடக்குப்பையை (சிசுக்கள், அங்கவீனக் குழந்தைகள், அனாதைகள், உடல் உள வளர்ச்சி தடைப்பட்டோர், மணமாகாத கர்ப்பிணிகள் எய்ட்ஸ், தொழுநோயாளர், வீதியோர வாய்க்கால்களுக்குள் கிடந்த ஆதரவற்ற வயோதிபர்கள்) தூக்கிச் சென்று ஏழ்மை நிறை அன்புச் சூழலில் சற்று வாழவைத்த நசரேத்தின் மரநிழல் இந்த அன்னை.

( 2 ம் பக்கம் பார்க்க )

# புனிதர் வரிசையில் குறவர் ஒருவர்

இந்தியாவின் குறவர்கள் போன்று, ஆயிரம் வருடங்களுக்கு முன்னே தாயகம் விட்டுப் புறப்பட்டு, மத்திய கிழக்கு நாடுகளுக்கூடாகச் சென்று 15ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் குடியேறிய இந்திய குறவர் கூட்டங்கள் அங்கு குழுக்களாக வசித்தனர். இவர்கள் நிரந்தர வதிவிடம் அற்ற நாடோடிகள். அடிக்கடி பெரும்பான்மையினரால் துன்புறுத்தப்பட்டவர்கள், விசேடமாக சர்வாதிகாரி கிட்லரின் நாசிப்படைகள் இக்குறவர்களில் 5 லட்சத்துக்குமதிகமானோரை 2ம் உலக மகாயுத்தத்தின் போது கொன்று குவித்தனர் இவர்களில் பலர் கத்தோலிக்கர்.

இவ்விதம் கிறிஸ்துவுக்கு இரத்த சாட்சியாக விளங்கிய ஒரு ஸ்பானிய குறவர் தான் முத்திப்பேறுபெற்ற செரபினோ ஜிம்னஸ் மல்லா என்பவர். இக் குறவர்கள் தம் கிறிஸ்தவ விசுவாசத்தை தமது பாரம்பரிய வழக்கங்களுடன் கலந்துவிடுகின்றனர். இவர்கள் ஒரு சந்தையிலிருந்து வேறு சந்தைக்கு, மிருகங்களையும், தம் குடிசைத்தயாரிப்புகளையும் (கூடை முதலியவை) விற்க அடிக்கடி செல்வர். அவ்வவ்விடங்களில் சிறிது காலம் தங்குவதும் உண்டு ஆகவேதான் 1861ல் பிறந்த செரபினோவின் திருமுழுக்குப் பதிவு பிறந்த இடத்திலல்ல, நகாமயில் எனற பாவட்டப்பதிவேட்டிலேயே காணப்படுகிறது.

தந்தையார் மனைவியையும் மூன்று குழந்தைகளையும் கைவிட்டுச் சென்றதனால் மூத்தவரான செரபினோவில் குடும்பபாரம் சுமந்தது. சிறு வயதிலே கூடைகள் பின்னி விற்று தாயையும் சகோதரர்களையும் தாபரித்தார். வயது வந்தபின் குதிரை வியாபாரத்தில் ஈடுபட்டார், ஏனைய குறவச் சிறுவர் போல இவரும் பாடசாலைக்குச் சென்றதில்லை, எழுதப்படிக்கத் தெரியாதவராகவே இருந்தார். வாழ்நாள் முழுவதும் இந் நிலைநீடித்தது.

வட அரகோன், கற்றலோனியா முதலிய ஸ்பானியா நகர்களில் சந்தைகூடும் இடங்களுக்குச் சென்று தம் வியாபாரத்தை மேற்கொண்டார். லெதிரா என்னும் ஊரிலிருந்த திரேசா கஸ்ரோ என்ற குறப்பெண்ணை, குறவர்களின் விவாகச்சடங்கு முறைப்படி திருமணஞ்செய்தார். நாற்பது வருட நகர வாழ்க்கைக்குப் பின் பாரபஸ்ரோ என்ற சிற்றூரில் ஒரு துண்டு நிலம் வாங்கி ஒரு சேரிப் பகுதியில் சிறிய வீடொன்றை அமைத்துக் குடியேறினார். அங்கிருந்து பல சந்தைகட்கும் சென்றுவியாபாரம் செய்து பெரும் பொருளீட்டினார்.

குழந்தைப் பேறு இல்லாததால் பெறாமகள் முறையான பைப்பிற்ற என்ற குழந்தையை எடுத்து வளர்த்தார். சிறு வயதில் கல்வி பெறாததால் தமக்கேற்பட்ட பின்னடைவுகளை மனதிற்கொண்டு, தம் பிள்ளையை புனித வின்செந்திபோல் துறவிகளின் பாடசாலைக்கு அனுப்பிக் கற்கச் செய்தார்.

1912ல் திருச்சபை முறைப்படி திருமண அருட்சாதனத்தைப்பெற்றார். அடிக்கடி திருப்பலிக்கு சமூகமளித்து பாவமன்னிப்பு நற்கருணை அருட்சாதனங்களால் ஆன்ம ஊட்டமும் ஊக்கமும் பெற்றார், குறவர்களிடம் காணப்படும் தேவதாய் பக்தி, இவரிலும் சுடர்விட்டுப் பிரகாசித்தது. மரியன்னையின் மேல் ஆழமான அன்பு கொண்டிருந்த இவர் தினசரி செபமாலையோதத் தவறமாட்டார்.

சுற்றாடலில் வாழ்ந்த மக்கள் அவரில் விளங்கிய நற்பண்புகளையும், சிறப்பாக மிளிர்ந்த பிறரன்புச் செயல்களையும் கண்டு மதித்து, மரியாதை செய்தனர். குழந்தைப் பருவத்தில் அனுபவித்த வறுமையின் துயரங்களை நினைவில் கொண்டு, வறியோர், உதவி தேவைப்பட்டோர் அனைவருக்கும் தாரளமாக உதவியளித்து வந்தார். தாராளமாகத் தருமம் செய்தமையால் அவர் இறந்த பொழுது அவரது பெயரில் மிகக்குறைந்த சொத்தே மிஞ்சியிருந்தது.

தன் வியாபாரத்தில் அவர் நேர்மையைக் கடைப்பிடித்தார். எவரையும் ஏமாற்றவில்லை. கஷ்டப்பட்ட வாடிக்கையாளருக்கு கடன் கொடுத்து உதவுவார். ஒரு முறை வியாபாரப்பகையால் களவாடல் குற்றஞ்சுமத்தப்பட்டு நீதிமன்ற விசாரணைக்கு அழைக்கப்பட்டபோதும் அவர் கதிகலங்கவில்லை, பொய்ச்சாட்சிகள் மூலம் அவரைப் படுகுழியில் தள்ளச் சதி செய்த போதும் நேர்மையாகவே சாட்சியமளித்தார். சட்டத்தரணிகள் அனைவரும் அவர் கள்வன் அல்லர், குறவர்களில் ஒரு புனிதமான மாணிக்கம் என்றனர்.

செரபினோவின் நேர்மையும் ஞானமும் விவேகமும் பிரச்சனைகளால் அல்லலுற்ற பலரை ஆலோசனை கேட்பதற்காக அவரைத் தேடிவரச் செய்தன. அவரது ஆயரும் வேறு பல பெரியோரும் கூட புத்திமதி கேட்க அவரிடம் வந்தனர்

1936 யூலை 17ல் ஸ்பெயின் நாட்டில் உள்நாட்டுப் போர் ஆரம்பமாயிற்று. பாரஸ்பரோவிலும் புரட்சிக் குழு ஒன்று நிறுவப்பட்டது. கோவில்கள் மூடப்பட்டன. வழிபாடுகள் தடை செய்யப்பட்டன. ஆயர் கிளோரின்ரோவும் பல குருக்களும் செரபினோ உட்பட பல இல்லறத்தோரும் கைது செய்யப்பட்டனர். ஒரு இளங்குருவைப் பிடிக்க முயன்றபோது தடை செய்ததாக செரபினோ மேல் குற்றம் சாட்டப்பட்டது.

இவரது நண்பனான புரட்சிவாதி ஒருவன் ''நீ செபமாலையைத் தூர எறிந்துவிட்டு. செபம் பண்ணுவதை நிறுத்திவிட்டால் உனக்கு விடுதலை வாங்கித் தருவேன்'' என்றான் அது ''விசுவாச மறுப்புக்குச் சமன்' என்று கூறிய செரபினோ மறுத்து விட்டார்.

யூலை இறுதியில் பாரஸ்பரோ புரட்சிவாதிகளின் இராணுவம் சிறையிலிருந்தோரைச் சுட்டுத்தள்ளியது. ஆயரும் ஏராளமான குருக்கள். துறவிகளும் 300க்குமதிகமான இல்லறத்தோரும் இரத்த சாட்சிகளாயினர், செரபினோ வேறு 15 பேருடன் அவ்வூர் சேமக்காலையின் மதிலுக்கருகாமையில் ஆகஸ்ட் 9ல் சுடப்பட்டார். செபமாலையைக் கையிலேந்திய வண்ணம் 'கிறிஸ்து அரசர் நீடூழி வாழ்க' என்று கூவிக்கொண்டே செரபினோ கீழே விழுந்து மரித்ததாக சாட்சிகள் கூறுகின்றனர்.

1996 மே மாதம் பாப்பிறை 2ம் அருள் சின்னப்பர், செரபினோவுக்கு முத்திப்பேறுபெற்ற பட்டமளித்துக் கூறியதாவது.

''அவர் வாழ்வின் பரிசுத்தனத்திற்காகவும், அவர் புண்ணியங்களின் வீரவைராக்கியத்திற்காகவும், விசுவாசத்துக்கு இரத்த சாட்சியம் பகர்ந்தமைக்காகவும் குறவர்களுள் முதல் முத்திப்பேறு பெற்றவர் ஆக்கியது திருச்சபை.

## துறவுக்கோர்

(1 ம் பக்க தொடர்)

இதற்கான உள்ளரங்க ஊற்று. தேவதாயின் ஏழ்மை, செபமாலை, நற்கருணை எழுந்தேற்றத்தின் முன் வியாழன் தோறும் நடைபெறும் திருவிழிப்புகளில் ஊன்றி நின்றது.

இதைக் கண்ணுற்றே பல படித்தோர், பட்டதாரிகள், வைத்திய கலாநிதிகள் இவள் சபையில் சேர்ந்து உலகம் பூராக (ஆபிரிக்க ஆசிய முஸ்லிம் நாடுகள் உட்பட) சேவை புரிகின்றனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டாக்டர் ஆஞ்சலோ ஞானப்பிரகாசமும் அவள் சபையில் துறவுபூண்டு பொராம்பிக்கில் சேவை புரிகின்றார். வேறு சில தமிழ் பட்டதாரி நங்கையர்கள் அன்னையின் இல்லங்களில் பணி புரிகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் அவர் சபையின் ஒரு இல்லம்கூட இல்லாதது வருந்தத்தக்கது.

''மிகச் சிறியோராகிய என் சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள்.'' (மத் 25:40)

# தேவதாயின் அற்புத வரலாறு (தொடர்ச்சி)

அர்ச். மரியம்மாள் தெய்வத்துக்குத் தாயாயிருக்க அவளுக்கு வேண்டிய சம்பூரண வரப்பிரசாதங்களைத் தேவன் கொடுத்த வரலாறு வருமாறு :–

பரிசுத்த கன்னிகை கலியாணம் முடிந்து நித்தியவார்த்தையானது மாம்சமாகும் வரைக்கும் ஆழ்ந்த தாழ்ச்சியினுடையவும் விரத்துவமான புண்ணியங்களுடையவுமான கருமங்களைச் செய்து வந்தாள். இப்பரம இரகசியத்துக்கு அவள் சரி சொல்லத் தக்கதாகப் பரம தேவன் அவளைச் சீர்ப்படுத்தின வகையானது. ஒரு நாள் நடுச்சாமத்தில் கர்த்தரைத் துதிக்க அவள் எழுந்த போது சம்மனசுக்கள் அவளுக்குச் சொன்னதாவது, "திவ்விய கர்த்தரின் பத்தினியே! எழுந்தருளும் தெய்வ மகத்துவம் உம்மை அழைக்கின்றது" என அவள் மறுமொழியாக கர்த்தருக்குச் சொன்னதாவது ஆண்டவரே! இதோ சூரியானது எழுந்து நிற்கின்றது. அடியாள் என்ன செய்யத் தேவரீர் மனதாயிருக்கிறீரென்று இவ்வார்த்தையைச் சொன்ன மாத்திரத்தில் அவள் பரவசமாகத் தெய்வதரிசனத்தைக் கண்டாள். இரட்சகர் மாம்சமாக அவள் மன்றாட வேண்டுமென்று சுவாமி அவளுக்கு தெரியப்படுத்தினார். சுவாமியானவர் முதல் நாளிற் செய்த காரியங்களை அவள் தீர்க்கமாக அறிந்து கொண்டாள். மேலும் தானெப்படி மண்ணால் உண்டுபண்ணப்பட்டதென்றும் கண்டு கொண்டாள். அதனால் பாதாளம் மட்டும் அவள் தாழ்ந்து தனது புன்மைத்தனத்தை அறிந்து மெத்தவும் பணிந்து கொண்டிருந்தாள். பின் சுவாமியானவர் இரண்டாம் நாளிலே செய்த காரியங்களை எல்லாம் அவள் அறிந்து கொண்டாள்.

வானத்தில் பேரிலும், பூமியின் பேரிலும் அவளுக்கு சர்வதிகாரமும் கொடுக்கப்பட்டது. ஆனால் தனக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை சர்வேஸ்வரனுடைய மகிமைக்கு அவசரமாயிருக்கும் போது மாத்திரம் காற்றின் பேரிலும், கடலின் பேரிலும், உஷ்ணம் குளிர்ச்சி என்பவற்றின் மட்டிலும் செலுத்துவாள் மூன்றாம் நாள் சுவாமி செய்த காரியங்களெல்லாம் அவளுக்கு தெரிவிக்கப் பட்டது. தண்ணீர், புல், கனிகள், பூண்டுகள், மற்றப் பூதங்கள், கற்கள், இவைகளுடைய குணாகுணங்களை நன்றாய் அறிந்திருந்தாள். இவளுடைய அறிவானது ஆதாம், சலமோன், மற்ற மனிதர்களுடைய அறிவைப்பார்க்கமிகப் பெரியதாயிருந்தது, சிருஷ்டிப்புகள் இவளுக்கு யாதொரு இடைஞ்சல் செய்யாமலிருக்க வரங் கொண்டிருந்தாள். தான் வருத்தப்பட சித்தமானதினாலே அந்த வரத்தைத் தனக்கு உபயோகப்படுத்திக் கொண்டில்லை, சர்வேஸ்வரன் மனிதர்களை எம் மாத்திரம் சிநேகிக்கிறாரென்று அறிந்திருந்தாள். அதனால் பாவிகளுடைய இரட்சணியத்துக்காக அவள் தனது உயிரைக் கொடுக்க சித்தமாய் இருந்தாள். நாலாம் நாள் தெய்வ இலட்சணங்களின் பெருந்தன்மைகளைத் தெளிவாய் அறிந்தாள். அந்த நாளில் சிருஷ்டிக்கப்பட்ட யாவையும் நன்றாய் கண்டறிந்தாள், கிரகங்கள், நட்சத்திரங்கள் மற்றும் உண்டான எல்லாவற்றின் மீதும் அதன் தொகைகள். இசைவு இவை முதலிய காரியங்களையும் அவள் நன்றாயறிந்தது மன்றி, அவைகள் பேரில் அதிகாரத்தையும் பெற்றுக் கொண்டாள். அந்த அதிகாரத்தைத் தனக்காக உதவிக்கொள்ளாமல் கர்முடைய திருப்பாலனுக்காக உதவிக் கொள்ளுவாள். எஜிப்து பட்டணத்திலே சூரியன் அதிக உஷ்ணமுள்ளதால் அவ் உஷ்ணம் குறையும்படியாய்ப் பாலகன் நிமித்தம் சூரியனுக்குக் கட்டளையிடுவாள் இந்த நாலாம் நாளிலே உலக இரட்சகர் தேவதிரவிய அனுமானங்களை ஏற்படுத்துவார் என்றும் அந்த அநுமானங்கள் வெகு வரப்பிரசாதங்களை கொடுக்குமென்றும் பாவிகளிலனேகர் அவ்வரப்பிரசாதங்களை அடைய மனமில்லாமற் போவார்களென்றும் சுவாமியானவர் அவளுக்குச் சொன்னார் அதனால் அவள் கொண்ட கஸ்தி நாவுக்கெட்டாததாயிருந்தது. அந்தக்கஸ்தி அவள் சீவிய கால முழுமையுமிருந்தது. இரட்சணியத்தைக் கைக்கொள்ளப்போகிற மனிதரின் சொற்பத் தொகையையும் அவளுக்குக் காட்டினார். இந்த நாளிலே கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலத்தின் சிருஷ்டிப்புக்களை அவளறிந்தாள். அவைகளின் நற்குணங்களையும் தீய குணங்களையும் பார்த்தாள். இந்த ஐந்தாம் நாளில் அவர் உண்டுபண்ணின. யாவற்றையும் அவளுக்குத் தெரிவித்து உன் பெயர் என்னவென்று சுவாமியானவர் கேட்டார். தேவரீர் மண்ணினாலே உண்டு பண்ணின. ஆதாம் என்பவருடைய மகளென்றவள் சொன்னாள். தெய்வம் மறுமொழியாக "இனி நமது ஏக குமாரனுக்கு தெரிந்து கொள்ளப்பட்ட மாதா என்கிற பெயர் உனக்கு வரும்" என்றார். (தொடரும்)

# பத்திமாவின் காட்சிச் சிறுவன் பிரான்சீஸ்

"அம்மா, பிரான்சீசும் மோட்சம் போவானா?"

பத்திமாவில் தேவதாயின் முதலாவது காட்சியில் லூசியா கேட்ட ஐந்தாவது கேள்வி இது.

காட்சி தந்த தேவ அன்னை, பிரான்சிசை மிகுந்த அன்புடனும் அன்னைக்குரிய கருணையுடனும் பார்த்தவண்ணம் கூறுகிறாள்:–

"ஆம்! அவனுந்தான், ஆயின் அதற்குமுன் அவன் அனேக தடவை செபமாலைகள் சொல்ல வேண்டும்."

இவ்விதம் தேவதாயினால் விசேடவிதமாக குறிப்பிடப்பட்ட சிறுவன்தான் பிரான்சீஸ் மார்த்தோ. தனது ஒன்பதாவது வயதில் அன்னை மரியாளின் காட்சியைப் பெறப் பேறு பெற்றவன் இவன்.

பிறப்பு

இறைவனின் சின்னஞ்சிறு சேவகனான பிரான்சீஸ், போர்த்துக்கால் தேசத்தின் பத்திமா ஆலயப்பங்கிலுள்ள அல்ஜஸ்ரல் எனும் கிராமத்தில் 1908ம் ஆண்டு யூன் 11ம் நாளில் பிறந்தான். மனுவல்பேதுரு மார்த்தோ, ஒலிம்பியா என்ற கத்தோலிக்க விவசாயக் குடும்பத்தின் ஆறாவது பிள்ளையே பிரான்சீஸ், ஏழாவது பிள்ளை பத்திமாவின் சின்னச் சம்மனசு என்றழைக்கப்பட்ட ஜசிந்தா.

வளர்ப்பு

வளம் நிறைந்த மண்போல விளங்கிய பிரான்சீஸ், வாழ்வின் அடிப்படை அறிவூட்டத்தை பெற்றோரிடமிருந்தே பெற்றான். இறைவனை அறிந்து அன்புசெய்யவும், செபிக்கவும், ஆலயப் பணிகளில் பங்கெடுக்கவும் அயலவரின் தேவைகளில் உதவி செய்யவும் நேர்மை, உண்மையுள்ளவனாயிருக்கவும், கீழ்ப்படிவுடன் விளங்கவும் வீட்டிலேயே பயிற்சி பெற்றான். பங்குத் தந்தையாலும் தன் அத்தையாலும் நடத்தப்பட்ட மறைக்கல்வி வகுப்புகளில் ஒழுங்காக ஆர்வத்துடன் பங்கெடுத்தான்.

பிரான்சீஸ் இயற்கையின் நண்பன் தனிமையில் இயற்கை அழகை ரசித்து மகிழ்வான், குன்றுகளில் நின்று சூரிய

( 4 ம் பக்கம் பார்க்க )

## பத்திமாவின்

(3 ம் பக்க தொடர்)

உதயத்தையும், அஸ்தமனத்தையும் பார்த்துப் பரவசமடைவான். இயற்கையின் எழிலை ரசிக்கும் தன்மை சின்னஞ்சிறு வயதிலேயே அவனை தியான வாழ்வுக்கு அழைத்துச் சென்றது.

**மந்தை மேய்ப்பு**

பாடசாலைக்கு அவன் சென்றதில்லை எனினும் தன் வயதையொத்த சிறுவர்களிலும் பார்க்க இறையரசு பற்றியும் பொதறிவு விவேகங்களிலும் அறிவுமிக்கவனாக விளங்கினான், மதிய உணவுடனும், தன்னை மகிழ்விக்கும் புல்லாங்குழலுடனும் அதிகாலையிலேயே மந்தையை ஓட்டிக்கொண்டு புறப்படும் பிரான்சிஸ், மாலையிலேயே வீடு திரும்புவான். தங்கை ஜசிந்தாவும் அவனோடு சேர்ந்து கொள்வாள், இவர்களது மைத்துனி லூசியாவே இச் சிறிய மந்தை மேய்ப்போர் குழுவின் தலைவி.

**வாழ்வில் திருப்பம்**

1916ல் தேவதூதரின் காட்சியைத் தொடர்ந்து பிரான்சிசின் வாழ்வில் ஒரு உறுதியான, ஆழமான நிலை உருவாயிற்று. தேவதூதன் சொல்லிக்கொடுத்த செபத்தை அடிக்கடி சொல்லவும், விசுவாசம், நம்பிக்கை, அன்பு அற்றவர்களுக்காக செபிக்கவும், ஒறுத்தல் செய்யவும் தொடங்கினான்.

1917ல் மே தொடக்கம் ஒக்டோபர் வரை தேவ அன்னையின் காட்சிகளைப் பெற்றபின், இச்சிறுவனின் வாழ்வில் ஒரு முக்கிய திருப்பம் உண்டாகியது.

**ஒறுத்தலும் செபமும்:**

''ஒவ்வொருவரும் தாம் பெற்றுக்கொண்ட அருட் கொடையைப் பயன்படுத்தி ஒருவருக்கொருவர் பணி புரியுங்கள்'' (1பேதுரு 4:10) என்ற வார்த்தைக்கேற்ப, இறைவன் மேலும் அயலவரின் ஆன்ம இரட்சணியத்தின் மேலும் பிரான்சிசுக்கு அதிக கரிசனை உண்டாகியது. தேவ அன்னை கேட்டுக்கொண்டபடி செபிப்பதிலும் ஆன்ம இரட்சணியத்துக்காக துன்பங்களை ஏற்றுக்கொள்வதிலும், அக்கறை காட்டினான்.

காட்சி இடம்பெற்ற இடத்திற்கு வரும் யாத்திரிகர்களை பிரான்சிஸ் ஆர்வமுடன் வரவேற்றான். பக்தியற்றோர் மட்டில் காருண்யமும், தமக்காக மன்றாடும்படி கேட்போர் மட்டில் இரக்கமும் கொண்டிருந்தான் சோர்வைத் தவிர்க்கவும், ஏழைகளுக்குக் கொடுக்கவும் தனது உணவைக் குறைத்துக்கொண்டான் நாள் முழுதும் நீர் அருந்தாதிருக்கவும், தவக்காலத்தில் அதிக ஒறுத்தல்கள் செய்யவும், தவத்தின் அடையாளமாக இடையில் கயிறு கட்டியிருக்கவும். செபிப்பதற்காகத் தன் விளையாட்டு நேரங்களைத் தியாகம் செய்யவும் பிரான்சிஸ் பழகிக்கொண்டான் கிறிஸ்துவின் பாடுகளுடன் தன்னை முழுவதும் எந்நேரமும் இணைத்திருந்த அவன், தனது சித்தம் முழுவதையும் ஆன்மாக்களின் இரட்சணியத்திலும் திருச்சபையின் வளர்ச்சியிலுமே ஈடுபடுத்தியிருந்தான்.

பிரான்சிசின் அப்போஸ்தலிக்கத்தின் முக்கிய பகுதி செபமாகும். தேவ அன்னையின் வேண்டுகோளுக்கிணங்க, செபிக்க வேண்டும் என்ற கடமையை உணர்ந்தவனாக, ஆழமான உயிருள்ள விசுவாசத்துடன் ஆர்வமாகத் தொடர்ந்து செபிக்கத் தொடங்கினான். இறைதியானத்தில் மூழ்கி இறைவனுடன் தொடர்ந்து பேசும்படியாக பிரான்சிஸ் அமைதியான தனிமையை நாடினான். முடியுமான பொழுதெல்லாம் திருப்பலியில் உதவிய பிரான்சிஸ் 'ஒளித்திருக்கும் இயேசுவானவர்' என்று அவனே அழைத்த தேவநற்கருணைநாதருடன் அதிக நேரம் செலவழிப்பதை வழக்கப்படுத்திக் கொண்டான். திருச்செபமாலையின் பதினைந்து மறையுண்மைகளையும் அவன் ஒவ்வொருநாளும் தியானித்தான். அத்துடன் தேவதூதனும், தேவ அன்னையும், பக்தியுள்ள குருக்களும் சொல்லிக் கொடுத்தபடி வேறு செபங்களிலும் ஒறுத்தல் முயற்சிகளிலும் ஈடுபடலானான். இறைவனுடைய துயர்நிறைந்த மனத்தைச் சாந்திப்படுத்தவும், அவன் மிக மிக அன்பு செய்த தேவ அன்னையை மகிமைப்படுத்தவும், உத்தரிக்கிறஸ்தல ஆன்மாக்கள் இரட்சணியம் பெறவும், திருச்சபையின் உலக மேய்ப்பரான பாப்பரசரின் கருத்துக்களுக்காகவும், பாவத்தில் இறுகி அருளருப்படைந்திருக்கும் உலகிற்காகவும் ஆர்வமுடன் செபித்தான். குடும்பத்தாருடனும் யாத்திரிகர்களுடனும் அடிக்கடி இணைந்து செபித்த அவன் இறைவனின் நன்மைத்தனங்களையும் ஆழமாகத் தியானித்தான்.

பிரான்சிஸ் அடிக்கடி கூறுவான் ''மனிதரின் பாவங்களால் இறைவன் துயருற்றிருக்கிறார். அவருக்கு ஆறுதலளிக்க விரும்புகிறேன். அவரது அன்பின் நிமித்தம் துயருற விரும்புகிறேன்.''

தனக்குக்கிடைத்த இறையருளிலிருந்து பெறக்கூடிய அனைத்துப் பயனுள்ள கனிகளையும், பெற்றுக்கொண்ட பிரான்சிஸ் அதன் பயனாக கிறிஸ்துவை வாழ்வில் பிரதிபலிப்பதிலும், கிறிஸ்துவ விழுமியங்களைக் கடைப்பிடிப்பதிலும், குறுகிய காலத்திலேயே முதிர்ச்சி பெற்றான். இறை சித்தத்துக்கு கீழ்ப்படிவதிலும், மரியாயின் மாசற்ற இருதயத்தை அன்பு செய்வதிலும் பாப்பரசருக்காகவும் திருச்சபைக்காகவும் பாவிகளின் மனமாற்றத்துக்காகவும் உறுதியாகச் செபிப்பதிலும் துன்பங்களைச் சகித்துக்கொள்வதிலும் நிலையாயிருந்த பிரான்சிஸ், சிறுவனாயிருந்தாலும் எம்மனைவருக்கும் சிறந்த ஓர் முன் மாதிரிகையாக விளங்குகிறான்.

**விண்ணகப் பேறு**

அதிக செபமாலைகளைச் சொல்ல வேண்டும் என்ற திருவாக்கினால் பிரான்சிசை நெறிப்படுத்திய தேவதாய் காட்சிச் சிறுவரில் இவனுக்கே முதலில் சம்பாவனை அளிக்க எண்ணினாள். 1918 ஒக்டோபரில் வியாதியாய் படுக்கையில் விழுந்தான். சிறிது சிறிதாக நோயின் கொடுமை அதிகரித்தது.

' அதிகம் துன்புறுகிறேன். ஆயினும் மனிதரின் பாவங்களால் நோவுறும் ஆண்டவரை சாந்தி செய்ய இத்துன்பங்களை ஏற்றுக்கொள்கிறேன். சிறிது காலத்துள் ஆண்டவரையும் தேவதாயையும் முகமுகமாகச் சந்திப்பேன்'' எனப் பிரான்சிஸ் லூசியாவுக்கு அமைதியாகக் கூறினான்.

1919 ஏப்ரல் 4ம் நாளில் பிரான்சிஸ் விண்ணகப்பேறு பெற்றான்.

**மண்ணில் மகிமை**

பிரான்சிஸ் மார்த்தோவை புனிதர் வரிசையில் சேர்ப்பதற்கான விசாரணையின் அறிக்கை 1988ல் பாப்பரசரிடம் அளிக்கப்பட்டது. தொடர்ந்து புனிதர் பட்ட மளிப்பின் முதற் கட்டமாக 1989 மே 13ல் 2ம் அருள சின்னப்ப பாப்பிறை, பிரான்சிஸ் மார்த்தோ ''வந்தனைக்குரியவர்'' எனப் பிரகடனம் செய்து கூறியதாவது:-

''இறையியல் விழுமியங்களான விசுவாசம், நம்பக்கை அன்பு என்பவற்றையும், தலையாய விழுமியங்களான நீதி, விவேகம், தன்னடக்கம சுய கட்டுப்பாடு என்பவற்றையும், இறைவனின் சிறிய ஊழியனான பிரான்சிஸ் இறைவனுக்காகவும், அயலாருக்காகவும் துணிவுடன் விண்ணக முடிவை நோக்கிக் கடைப்பிடித்தார் எனபது உறுதி''

(புனித பட்டமளிப்புக்கான 2ம் கட்ட விசாரணைகள் நடைபெறுகின்றன.)

விற்பனையாகிறது.

**யாழ் திருச்சபை வரலாறு**

( கி. பி. 50 — 1900 )

விலை ரூபா 50/-

கிடைக்கும் இடம்:
''வளன் ஆச்சிரமம்''
102, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

Print : Annai printers, Jaffna.
Published by PAX CHRISTI,
St JOSEPHS ASHRAM,
102, Main st, Jaffna.